**மார்ச் – 14**


# TNPSC துளிகள்

- சிறுநீரக ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்கள் தடுப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழக் கிழமை உலக சிறுநீரக தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு, "Kidney Health for All – Caring for People, Protecting the Planet" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் HPV தடுப்பூசி இயக்கம்

- தமிழ்நாட்டின் நான்கு சோதனை மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசித் திட்டத்தில், ஆறு வாரங்களில் 81% இலக்கு எட்டப் பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுப்பதற்காக, 14 வயது சிறுமிகளுக்கு தடுப்பூசி போடும் இத்திட்டம் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 27 அன்று தொடங்கப்பட்டது.
- இந்த சோதனை திட்டம் அரியலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது.
- சுமார் 27,000 சிறுமிகள் அடையாளம் காணப்பட்டு, அவர்களில் 81% அளவிலான HPV தடுப்பூசி ஒருமுறை போடப்பட்டது.
- இந்திய அரசின் நாடு தழுவிய HPV தடுப்பூசி பிரச்சாரத்தைத் தொடர்ந்து, இத்திட்டம் தற்போது மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.





## தமிழ்நாடு தொழில்துறைத் திட்டங்கள்

- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் பல்வேறு தொழில் மற்றும்

வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

- ❖ காஞ்சிபுரம் மாவட்டம் பிள்ளைப்பாக்கத்தில், அசோக் லேலாண்ட் நிறுவனத்தின் சார்பில் ₹500 கோடி முதலீட்டில் மின்கலத் தொகுப்புத் தயாரிப்பு அலகுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- ❖ கரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் மொத்தம் ₹119 கோடி செலவில் மினி டைடல் பூங்காக்கள் கட்டப்பட உள்ளன.
- ❖ திருவள்ளூர் மாவட்டத்தில் ₹100 கோடி முதலீட்டில் மின் மற்றும் மின்னணு இணைப்பான்கள் தயாரிப்பு ஆலையை நிறுவ Hirose Electric Group உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.
- ❖ தமிழ்நாட்டில் பசுமை எரிசக்தி மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்த, பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்துடன் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.





## நகர எரிவாயு விநியோக வலையமைப்பு

- ❖ பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் நகர்ப்புற எரிவாயு விநியோகத் திட்டத்திற்குப் (CGD) பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- ❖ இத்திட்டம் நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.
- ❖ சுமார் ஒன்பது லட்சம் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குக் குழாய் மூலம் இயற்கை எரிவாயு (PNG) வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ CGD என்பது வீடுகள், தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களுக்கு நிலத்தடி குழாய்கள் மூலம் இயற்கை எரிவாயுவை வழங்கும் ஒரு வலையமைப்பாகும்.
- ❖ நிலக்கரி மற்றும் டீசல் போன்ற மரபுசார் எரிபொருட்களுடன் ஒப்பிடும்போது இயற்கை எரிவாயு ஒரு தூய்மையான எரிபொருளாகக் கருதப்படுகிறது.
- ❖ சென்னையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL) நிறுவனத்தின் உயவுப்பொருள் கலவை ஆலையைப் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- ❖ இது உலகின் மிகப்பெரிய உயவுப்பொருள் கலவை ஆலைகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது என்பதோடு இது இறக்குமதிச் சார்பைக் குறைத்து, பல்வேறு தொழில்

துறைகளுக்குத் தேவையான உயவு எண்ணெய்களை வழங்கும்.

- அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்தில் நெடுஞ்சாலை புறவழிச்சாலை அமைப்பதற்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.




## 1952 ஆம் ஆண்டு மதராஸ் மாநிலத்தில் தேர்தல்கள்




- 1951-52 ஆம் ஆண்டு நாடு ஒரு குடியரசாக மாறிய பின்னர், வயது வந்தோர் வாக்குரிமை முறை நடைமுறைக்கு வந்த முதல் தேர்தலில் போது, முக்கியப் போட்டியாளர்கள் காங்கிரஸ் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (CPI) ஆகும்.
- 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆந்திரக் குழு மற்றும் கேரள குழு போன்ற மொழிவாரி அடிப்படையில் காங்கிரஸ் அதன் மாநில அளவிலான பிரிவுகளை நிறுவியிருந்த போதிலும், ஆந்திரா மாநிலம் அப்போது உருவாகவில்லை.
- மொழிவாரி மாநிலங்கள் என்ற யோசனைக்கு ஆதரவு தெரிவித்த காங்கிரஸ் தலைமை, அதற்கு ஆதரவாக ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டை எடுக்கவில்லை.

- சி. ராஜகோபாலாச்சாரி உள்ளிட்ட தலைவர்கள் இந்தக் யோசனைக்கு எதிராக இருந்தனர்.
- இது நாட்டில் பிளவுப் போக்குகளுக்கு வழி வகுக்கும் என்ற கருத்தை அவர்கள் கொண்டிருந்தனர்.
- பிரிவினைக்குப் பிறகு இந்த நடைமுறை யதார்த்தத்தை ஏற்றுக் கொள்வது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது.
- "மொழிகள் மற்றும் கலாச்சாரங்களின் கலவை" தமிழ்நாட்டின் (அப்போது மெட்ராஸ் என்று அழைக்கப்பட்டது) பலமாக இருந்தது என்று ராஜாஜி வாதிட்டார்.
- மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டால், "ஒரு காலத்தில் மிகப் பெரியதாகவும், முக்கியமானதாகவும், முற்போக்கானதாகவும் இருந்த இந்த மாகாணம், இனி மேல் குறுகிய மனப்பான்மை கொண்டதாகவும், கலாச்சாரத்திற்கு எதிரானதாகவும் மாறும்" எனவும் வாதிட்டார்.
- 1946 இல் பெரும்பான்மையைப் பெற்ற முதலமைச்சர் பி.எஸ். குமாரசாமி ராஜாவும் அவரது பெரும்பாலான அமைச்சர்களும் அப்போதைய தேர்தலில் தோல்வியடைந்தனர்.
- இதனால் தொங்கு சட்டமன்றம் உருவானது.
- 375 உறுப்பினர்களைக் கொண்ட சபையில், காங்கிரஸ் 152 இடங்களை மட்டுமே பெற்றது, ஆனால் அது தனிப்பெரும் கட்சியாக இருந்தது.
- இரண்டாவது இடத்தைப் பிடித்த சிபிஐ, 62 இடங்களைப் பெற்றது.
- சென்னையில் தான் சிபிஐ தேர்தலில் போட்டியிடும் முடிவை அறிவித்தது.
- இடதுசாரி இயக்கத்தின் உயரிய தலைவர்களில் ஒருவரான ஏ.கே. கோபாலன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
- இருப்பினும், காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாத போதிலும், அதன் பிரதிநிதியான ராஜாஜியை அது முதலமைச்சராகப் பெற முடிந்தது.
- 1952 ஆம் ஆண்டில், அப்போதைய ஆளுநர் ஸ்ரீ பிரகாசா, சி. ராஜகோபாலாச்சாரியை (சி.ஆர். அல்லது ராஜாஜி) சட்ட மேலவை உறுப்பினராகப் பரிந்துரைத்தார்.
- இலக்கியம், அறிவியல், கலை, கூட்டுறவு இயக்கம் மற்றும் சமூக சேவை போன்ற துறைகளில் சிறப்பு அறிவு அல்லது நடைமுறை அனுபவம் உள்ள நபர்களை நியமனம் செய்ய அனுமதிக்கும் அரசியலமைப்பு விதியின் கீழ் இது இருந்தது.
- அப்போது ராஜாஜி உண்மையில் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெற்று இருந்தார்.
- இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகப் பணியாற்றி முதலமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்ட ஒரே இந்தியர் ராஜாஜி ஆவார்.
- ராஜாஜியின் நியமனம் மட்டுமே அரசியல் புயலை எழுப்பியது,
- ஏனெனில் அவர் பின்னர் ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய மாநிலத்தின் முதலமைச்சராகவும் அதன் பின் நியமிக்கப் பட்டார்.
- மக்கள் தீர்ப்பின் பின்னர் மாற்றக் காலத்தில் பதவியில் இருக்கும் ஒரு அமைச்சர் குழு, சட்டமன்றத்தில் காலியாக உள்ள இடங்களை நிரப்ப ஆளுநருக்கு பரிந்துரைக்க முடியுமா என்பது தொடர்ந்து விவாதிக்கப்படும் பிரச்சினை ஆகும்.
- மேலும் ஆளுநர் அத்தகைய பரிந்துரையை ஆதரித்து செயல்பட முடியுமா என்பதும் தான்.
- இத்தகைய குழப்பமான தீர்ப்பைக் கருத்தில் கொண்டு, ஆளுநர் ராஜாஜியை அழைத்ததன் மூலம் மேலும் இதை தீவிரமாக்கினார்.

- ராஜாஜி மார்ச் 31, 1952 அன்று காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியின் தலைவரானார்.
- மேலும் ராஜாஜி அமைச்சரவையில் காமன்வெல் கட்சியின் தலைவர் எம்.ஏ. மாணிக்கவேல் நாயக்கரும் சேர்க்கப்பட்டார்.
- மே மாதத் தொடக்கத்தில் சட்டமன்றம் அமைக்கப்பட்ட நேரத்தில், காங்கிரஸின் பலம் 165 ஆக உயர்ந்தது.
- பின்னர் நடைமுறையில் வந்த விதிமுறை என்னவென்றால், சட்டமன்றத் தேர்தலுக்கான மாதிரி நடத்தை விதிகள் அமலுக்கு வந்தவுடன், எந்த தற்போதைய அரசாங்கமும் எந்தவொரு கொள்கை முடிவையும் எடுக்காது.
- அவசரத்தின் காரணமாக அத்தகைய முடிவை எடுக்க வேண்டுமென்றால், அது தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- அதன் மூலம், இந்த நடைமுறையை உருவாக்கியதற்கு தமிழ்நாடு பொறுப்பேற்றுக் கொண்டது.

# தேசியச் செய்திகள்

## இயற்கை எரிவாயு ஆணை 2026




- உலகளாவிய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) விநியோகச் சிக்கல்களுக்கு மத்தியில், இயற்கை எரிவாயு ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை அளிப்பதற்காக இந்திய அரசு 'இயற்கை எரிவாயு (வழங்கல் ஒழுங்குமுறை) ஆணை, 2026' என்பதை வெளியிட்டுள்ளது.
- இந்த ஆணையின் கீழ், உர ஆலைகள் 'முன்னுரிமைத் துறை-2'-இன் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன என்பதோடு இது கடந்த ஆறு மாதங்களின் சராசரி விநியோகத்தின் அடிப்படையில் அவற்றுக்குக் குறைந்தது 70% இயற்கை எரிவாயு விநியோகத்தை உறுதி செய்கிறது.

- உள்நாட்டு உர உற்பத்தியைப் பாதுகாப்பதையும், காரிஃப் பருவ விதைப்பு காலங்களில் விவசாயிகளுக்குப் போதுமான விநியோகம் கிடைப்பதை உறுதி செய்வதையும் இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உரத் துறையின் தரவுகளின் படி, 2026 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதி நிலவரப்படி இந்தியாவின் மொத்த உர இருப்பு 180.12 லட்சம் மெட்ரிக் டன்களாக (LMT) உள்ளது என்பதோடு இது முந்தைய ஆண்டை விட சுமார் 36.6% அதிகமாகும்.

## கருணைக் கொலை செயல்திட்டம்




- உச்ச நீதிமன்றம் (SC) முதன்முறையாக கருணைக்கொலை செயல்திட்டத்தைப் பயன்படுத்துகிறது.
- ஹரிஷ் ராணா Vs இந்திய ஒன்றியம் வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒரு நபரின் செயற்கை உயிர்காப்புக் கருவியை திரும்பப் பெற அனுமதித்தது.
- நோயாளியின் நலனுக்கான கொள்கையின் அடிப்படையில் இது இருந்தது
- அவர் 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு உணர்வற்ற நிலையில் இருக்கிறார்.
- நோயாளியின் பெற்றோரும் இரு மருத்துவ வாரியங்களும் ஒருமனதாக குணமடைவது சாத்தியமற்றது என்று ஒப்புக் கொண்டதால், வழக்கமான 30 நாள் பரிசீலனைக் காலத்தை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- இது மருத்துவ ரீதியாக உதவிய ஊட்டச்சத்து மற்றும் நீரேற்றத்தை (CANH - clinically assisted nutrition and hydration) திரும்பப் பெற அனுமதிக்கும்.
- உச்ச நீதிமன்றம் அப்போது கருணைக் கொலை' (Passive Euthanasia) என்று அழைத்ததற்கு அதன் சொந்த 2018 அரசியலமைப்பு அமர்வு வழிகாட்டுதல்களை செயல்படுத்தியது இதுவே முதல் முறை ஆகும்.
- கருணைக்கொலை என்பது துன்பத்தைப் போக்க ஒரு நோயாளியின் மரணத்தை விரைவுபடுத்துவதைக் குறிக்கிறது.
- பெரும்பாலும் கருணைக்கொலை என்று குறிப்பிடப்படுகிற இது பொதுவாக ஒரு

நோயாளியைக் குணப்படுத்த முடியாத அல்லது இறுதி துயரத்தால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நிகழ்கிறது.

- ❖ இது பரவலாக மனிதர்களின் ஈடுபாடு கொண்டவை மற்றும் ஈடுபாடற்றவை என்ற இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்படுகிறது.
- ❖ மனிதர்களின் ஈடுபாடற்ற கருணைக் கொலையின் கீழ், உயிரை நிலை நிறுத்தும் மருத்துவச் சிகிச்சையை நிறுத்தி வைப்பதன் மூலமோ அல்லது அதனைத் திரும்பப் பெறுவதன் மூலமோ ஒரு நோயாளி இயற்கையாக இறக்க அனுமதிக்கப்படுகிறார்.
- ❖ எனவே, உயிரை அழித்தல் அல்லது இயற்கைக்கு மாறான வாழ்க்கையை நிறுத்துதல் என்று இதனைக் கூற முடியாது.
- ❖ இதன் விளைவாக, இது பிரிவு 21 (வாழ்க்கை மற்றும் கண்ணியத்திற்கான உரிமை) மீறலாகாது என்று கருதப்படுகிறது.
- ❖ இந்தியாவில் கடுமையான வழிகாட்டுதல்களின் கீழ் இது சட்டப் பூர்வமானது.
- ❖ பி. ரத்தினம் வழக்கில் (1994), உச்ச நீதிமன்றம் ஆரம்பத்தில் வாழ்வதற்கான உரிமையில் இறக்கும் உரிமையும் அடங்கும் என்று கூறியது என்பதோடு இது தற்கொலையை குற்றமற்றதாக்குகிறது.
- ❖ ஆனால் கியான் கவுர் வழக்கில் (1996) ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, பிரிவு 21 இன் கீழ் வாழும் உரிமையில் இறக்கும் உரிமை இல்லை என்று தீர்ப்பளித்தது.
- ❖ ஆனால் அது இயற்கைக்கு மாறான முறையில் இறப்பதற்கும் கண்ணியத்துடன் இறப்பதற்கும் இடையில் வேறுபடுத்தியது.
- ❖ அருணா ராமச்சந்திர ஷான்பா வழக்கில் (2011), உச்ச நீதிமன்றம் கருணைக் கொலைக்கான மனுவை நிராகரித்தது, ஆனால் குணப்படுத்த முடியாத மற்றும் மீள முடியாத நோயாளிகளுக்கு கடுமையான நிபந்தனைகளின் கீழ் செயலற்ற கருணைக் கொலையை அனுமதித்தது.
- ❖ உயர் நீதிமன்ற ஒப்புதலுக்கு உட்பட்டு, இந்தியாவில் முதன்முறையாக மனித ஈடுபாடற்ற கருணைக்கொலையை உச்ச நீதிமன்றம் சட்டப் பூர்வமாக்கியது.
- ❖ காமன்காஸ் வழக்கில் (Common cause judgment 2018) தீர்ப்பில், உச்ச நீதிமன்றம் அதை அங்கீகரித்து, கண்ணியத்துடன் இறக்கும் உரிமை பிரிவு 21 இன் கீழ் ஒரு அடிப்படை உரிமை என்று தீர்ப்பளித்தது.
- ❖ 2018 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு ஈடுபாடற்ற கருணைக்கொலை மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான அடிப்படை உரிமையின் ஒரு பகுதியாக இறக்கும் செயல்முறையை சீராக்க முன்கூட்டியே மருத்துவ உத்தரவுகள் அல்லது 'வாழும் உயில்கள்' வழங்கும் உரிமையை அது உறுதி செய்தது.
- ❖ அரசியலமைப்பின் பிரிவு 21 இன் கீழ் வாழ்க்கை மற்றும் கண்ணியத்திற்கான அடிப்படை உரிமையில் "கண்ணியத்துடன் இறக்கும் உரிமை" அடங்கும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- ❖ 2026 ஆம் ஆண்டில், தற்போதைய வழக்கில், அதற்கான வழிகாட்டுதல்களை வகுத்து, 'வாழும் உயில்' என்ற கருத்தை அது அங்கீகரித்தது.
- ❖ மனிதர்களின் ஈடுபாடு கொண்ட கருணைக்கொலை என்பது பொதுவாக ஆபத்தான மருந்துகளை வழங்குதன் மூலம் குணப்படுத்த முடியாத அல்லது ஆபத்தான நிலையில் உள்ள நோயாளியின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மருத்துவரின் வேண்டுமென்றே செய்யப்படும் செயலைக் குறிக்கிறது.
- ❖ மனிதர்களின் ஈடுபாடு கொண்ட கருணைக்கொலை இந்தியாவில் சட்டவிரோதமானது.

- உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில், 'ஈடுபாடற்ற கருணைக்கொலை' என்பது காலாவதியான மற்றும் குழப்பமான சொல் என்ற ஒரு பொதுவான ஒருமித்த கருத்தை ஒப்புக் கொண்டது.
- 'கருணைக்கொலை' என்பது மனிதர்களின் ஈடுபாடு கொண்ட கருணைக் கொலையை மட்டுமே குறிக்கும் என்பதோடு இது இப்போதும் அனுமதிக்கப்படாது.
- 'மருத்துவ சிகிச்சையை திரும்பப் பெறுதல் அல்லது நிறுத்துதல்' என்பது ஈடுபாடற்ற கருணைக்கொலை' என்ற வார்த்தையை மாற்றும்.
- உயிர்வாழும் தலையீடுகளை நிறுத்தி வைப்பது என்பது தொடர்ச்சியான உணர்வற்ற நிலையில் (PVS - persistent vegetative state) மயக்கமடைந்த அல்லது உணர்வற்ற நோயாளிகளின் மீதான "ஒற்றைச் செயல்" அல்லது "அவர்களைக் கைவிடுதல்" என்பதாக இருக்கக் கூடாது என்று நீதிமன்றம் கூறியது.
- CANH ஐ திரும்பப் பெறும் செயல்முறை, ஒரு PVS நோயாளியின் வாழ்க்கையின் மிகவும் பாதிக்கப்படக் கூடிய கட்டத்தில் நன்கு கட்டமைக்கப்பட்ட, வடிவமைக்கப்பட்ட, வலுவான மற்றும் வெளிப்படுத்தப்பட்ட நோய்த்தடுப்பு பராமரிப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.
- கண்ணியத்துடன் இறக்கும் உரிமை, தரமான நோய்த்தடுப்பு மற்றும் வாழ்க்கை முடிவு (EOL - End-of-Life) பராமரிப்பைப் பெறும் உரிமையிலிருந்து பிரிக்க முடியாதது.
- மருத்துவச் சிகிச்சையை திரும்பப் பெற அல்லது நிறுத்துவதற்கான எந்தவொரு முடிவும் இரண்டு முதன்மை அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது.
- முதலாவது, கேள்விக்குரிய தலையீடு 'மருத்துவச் சிகிச்சை' என்று தகுதி பெற வேண்டும், இரண்டாவதாக, அதை திரும்பப் பெறுவது கண்டிப்பாக நோயாளியின் "நலன் காப்பதாக" இருக்க வேண்டும்.
- வீட்டிலேயே செய்யப்பட்டாலும் கூட, CANH ஒரு மருத்துவச் சிகிச்சையாக தகுதி பெறுகிறது என்று அது கூறியது.
- உயிர் காக்கும் ஆதரவை திரும்பப் பெறுவது நோயாளியின் நலன் காப்பதாக உள்ளதா என்று விசாரிக்கும் போது, நல்ல மருத்துவ முடிவுகள் மற்றும் நெறிமுறைப் பரிசீலனைகள் இரண்டும் சமமாக இருப்பது முக்கியம்.
- உயிர்காக்கும் ஆதரவை திரும்பப் பெறுவதற்கான விண்ணப்பங்களை ஆய்வு செய்ய இரண்டாம் நிலை மருத்துவ வாரியங்களை அமைக்க பதிவு செய்யப்பட்ட மருத்துவப் பயிற்சியாளர்களின் குழுக்களை அமைக்க அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தலைமை மருத்துவ அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.
- இந்த நிலைமைகளில் உயிர் காக்கும் ஆதரவை திரும்பப் பெறுவதற்கு முதன்மை மற்றும் இரண்டாம் மருத்துவ வாரியங்கள் ஒருமனதாக பரிந்துரைத்தால், மருத்துவமனைகள் மூலம் முதல் வகுப்பு நீதித் துறை நீதிபதிகளுக்கு அது தெரிவிக்கப் பட வேண்டும்.
- "மனிதர்களின் ஈடுபாடு கொண்ட" மற்றும் "ஈடுபாடற்ற" கருணைக்கொலைக்கு இடையிலான வேறுபாடு "செயல்" மற்றும் "தவிர்ப்பு" என்ற எளிமையான இருமைக்கு அப்பாற்பட்டது.
- இதன் விளைவாக, செயலில் கருணைக்கொலை சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட வேண்டுமென்றால், அத்தகைய இழப்பை அங்கீகரிக்கும் வகையில் ஒரு வெளிப்படையான சட்டமன்றச் சட்டம் இருக்க வேண்டும்.


***மற்ற நாடுகளில் இதன் நிலை***

- முதன்மையாக பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பர்க், ஸ்பெயின், ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்து உட்பட பல ஐரோப்பிய நாடுகள் உதவியால் இறக்கும் வடிவங்களை

சட்டப்பூர்வமாக்கியுள்ளன.

- கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் அனைத்தும் 2015 முதல் உதவியுடன் இறக்கும் சட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளன.
- 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், உதவியுடன் இறக்கும் செயல்பாடு UK நாட்டில் சட்ட விரோதமானது.
- ஆனால் பொது மக்கள் சபை (கீழவை) " குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் (வாழ்க்கை முடிவு) மசோதா" என்ற ஒரு முக்கிய மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இது இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் அதைச் சட்டப்பூர்வமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில், பிரான்ஸ் நாடு நோய்வாய்ப்பட்ட அல்லது மோசமாக காயமடைந்த நோயாளிகளுக்கு இறக்கும் உரிமையை அனுமதிக்கும் ஒரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

## உயரடுக்கு பிரிவினர் (கிரீமி லேயர்) குறித்த உச்ச நீதிமன்ற தீர்ப்பு




- இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே (ஓபிசி) உயரடுக்கு பிரிவினரை தீர்மானிக்க வருமானம் மட்டுமே அளவுகோலாக இருக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை ஊழியர்கள் மற்றும் அரசுத் துறையில் உள்ளவர்களுக்கு இடையிலான சமநிலை குறித்த நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கேள்விக்கு இது தீர்வு கண்டது.
- முன்னதாக, உயரடுக்கு பிரிவில் சேர்க்கப்பட்டவர்கள் ஓபிசி இடஒதுக்கீட்டுச் சலுகைகளைப் பெறுவதற்கு உரிமை இல்லை.
- இப்போது, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு பொதுத்துறை நிறுவனங்களிலும் தனியார் வேலைவாய்ப்பிலும் பணி புரியும் பெற்றோரின் குழந்தைகளுக்குப் பொருந்தும்.
- 2015 முதல் குடிமைப் பணித் தேர்வுகளில் தோன்றி ஓபிசி ஒதுக்கீடு மறுக்கப்பட்ட சுமார் 100 நபர்களுக்கு இது நிவாரணம் அளிக்கிறது.

- ❖ உயரடுக்கு பிரிவினர் (கிரீமி லேயர்) அடையாளம் காண்பதற்கான முதன்மை நடவடிக்கை ஊதியம் மட்டுமல்லாமல் சமூக அந்தஸ்தும் இருக்க வேண்டும் என்று நீதிபதிகள் பி.எஸ். நரசிம்ம மற்றும் ஆர். மகாதேவன் ஆகியோர் அடங்கிய அமர்வு உறுதிப்படுத்தியது.
- ❖ கிரீமி லேயர் அளவுகோல் தொடர்பாக பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (டிஓபிடி) வெளியிட்ட கடிதத்தின் காரணமாக எழும் மனுக்களை இந்த அமர்வு விசாரித்தது.
- ❖ இது செப்டம்பர் 1993 இல் நீண்ட காலத்திற்கு முன்பு வெளியிடப்பட்ட ஒரு அதிகாரப்பூர்வ குறிப்பாணையை (OM) தெளிவுபடுத்துகிறது.
- ❖ கிரீமி லேயர் நிலையை நிர்ணயிப்பதற்கான வருமானம்/செல்வத் தேர்வில் இருந்து குறிப்பாணையானது சம்பளம் மற்றும் விவசாய வருமானத்திலிருந்து வரும் வருமானத்தை விலக்கியதாக நீதிமன்றம் குறிப்பிட்டது.
- ❖ அக்டோபர் 14, 2004 தேதியிட்ட அந்தக் கடிதம், பொதுத்துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பள வருமானத்தைச் சேர்க்க உத்தரவிட்டது.
- ❖ இது அரசு ஊழியர்களின் குழந்தைகளுக்கும் பொதுத்துறை/தனியார் துறை ஊழியர்களின் குழந்தைகளுக்கும் இடையே பாகுபாட்டை ஏற்படுத்தியது.
- ❖ இது அவர்களின் சம்பளத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் மட்டுமே இருந்தது.
- ❖ எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது தனியார் வேலைவாய்ப்பு போன்றவற்றில் பணியமர்த்தப்பட்டவர்களின் குழந்தைகளை, சம்பளத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் அடிப்படையில் மட்டுமே இட ஒதுக்கீட்டின் நன்மையிலிருந்து விலக்கப்பட்டதாகக் கருதுவது சரியானதல்ல.
- ❖ அவர்களின் பதவிகளைக் குறிப்பிடாமல் (குழு A அல்லது B, அல்லது குழு C அல்லது D) கருதும் போது, அது நிச்சயமாக இதே போல் வைக்கப்பட்டுள்ள தரப்பினரிடையே பாகுபாட்டிற்கு வழிவகுக்கும்.
- ❖ மேலும் அது சமமானவர்கள் சமமில்லாமல் நடத்தப்படுவதற்குச் சமமாகும்.
- ❖ இதன் மூலம் சரத்துகள் 14, 15 மற்றும் 16 இன் கீழ் சமத்துவக் கோட்பாட்டின் கடுமையை இது ஈர்த்தது.

***பின்னணி***

- ❖ 1992 ஆம் ஆண்டு இந்திரா சாவ்னி vs இந்திய ஒன்றியம் வழக்கில், அல்லது மண்டல் தீர்ப்பு என்றும் அழைக்கப்படும் ஒரு மைல்கல் தீர்ப்பைத் தொடர்ந்து, ஓபிசிக்களுக்குள் 'கிரீமி லேயர்' என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ கிரீமி லேயர் எனப்படும் பல ஆண்டுகளாக சில சமூக மற்றும் பொருளாதாரச் சலுகைகளை குவித்துள்ள குடும்பங்கள் கொண்ட சில வகை ஓபிசி நபர்களை விலக்குவதே இதன் யோசனையாக இருந்தது.
- ❖ செப்டம்பர் 8, 1993 அன்று, டிஓபிடி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது, அதில் யார் ஓபிசி என வகைப்படுத்தப்படுகிறார்கள், அவர்களில் யார் கிரீமி லேயரைச் சேர்ந்தவர்கள் என்பதை அது தெளிவுபடுத்தியது.
- ❖ அரசு வேலைகளில் இருப்பவர்களுக்கு, 'கிரீமி லேயர்' என்பது அரசியலமைப்புப் பதவிகளை வகிக்கும் நபர்கள்; அகில இந்திய சேவைகள், மத்தியச் சேவைகள் மற்றும் மாநிலச் சேவைகளின் குரூப்-ஏ/வகுப்பு-I அதிகாரிகள்; மத்திய மற்றும் மாநிலத்தின் குரூப்-பி/வகுப்பு-II சேவைகள்; பொதுத்துறை நிறுவனங்களின் ஊழியர்கள்; ஆயுதப்படை அதிகாரிகள்; தொழில் வல்லுநர்கள் மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறையைச் சேர்ந்தவர்கள்; சொத்து உரிமையாளர்கள்; மற்றும் வருமானம்/செல்வத் தேர்வு போன்ற குழுக்களைக் குறிப்பிடுகிறது.

- பெற்றோர்களில் ஒருவர் குரூப்-ஏ-யின் மூலமான நேரடி பணியமர்வாக இருந்தால், அல்லது 40 வயதுக்கு முன் பதவி உயர்வு பெற்றால், அவர்களின் குழந்தைகள் ஓபிசி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.
- இதே போல், பெற்றோர் இருவரும் குரூப்-பி நேரடியாக பணியமர்த்தப்பட்டால் செய்யப்பட்டால், அவர்களின் குழந்தைகள் கிரீமி லேயரின் கீழ் வருவார்கள்.
- ஆயுதப் படைகளைப் பொறுத்தவரை, லெப்டினன்ட் கர்னல் பதவி வரை உள்ள அதிகாரிகள் ஓபிசி ஒதுக்கீட்டைப் பெறலாம், ஆனால் அதற்கும் மேலான உயர் பதவிகள் கிரீமி லேயரில் உள்ளன.
- அரசுத் துறையில் இல்லாதவர்களுக்கான அளவுகோல் 1993 இல் ஆண்டுக்கு ரூ.1 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டது.
- இது காலப்போக்கில் திருத்தப்பட்டதுடன் 2017 முதல், இந்த வருமான வரம்பு ரூ.8 லட்சமாக உள்ளது.
- செப்டம்பர் 1993 சுற்றறிக்கையில், கிரீமி லேயர் நிலையைத் தீர்மானிப்பதற்கான வருமானம் மற்றும் செல்வச் சோதனைக்கு "சம்பளம்" அல்லது "விவசாயம்" மூலம் கிடைக்கும் வருமானம் கணக்கிடப்படாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டது.
- ஆனால் EWS (Economically Weaker Sections - பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவுகள்) நிலையைத் தீர்மானிப்பதில், இது "சேர்க்கப்பட்டுள்ளது".

## சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம்




- சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது.
- இதற்காக மக்களவையில் 12 மணி நேர விவாதம் நடைபெற்றது.
- சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதிக்கப்படும்போது, வழக்கமாக சபாநாயகர் தலைமை நாற்காலியில் அமர மாட்டார்.
- இந்த அரிய தீர்மானங்கள் 1954 (ஜி.வி. மாவலங்கருக்கு எதிராக), 1966 (ஹுகம் சிங்கிற்கு எதிராக) மற்றும் 1987 (பால்ராம் ஜாக்கருக்கு எதிராக) ஆகிய ஆண்டுகளில்

நடந்தன.

- இந்தத் தீர்மானத்தின் அனைத்து நிகழ்வுகளிலும், சபையானது மற்ற அதிகாரிகளால் 14 நாட்கள் தலைமை தாங்கப்பட்டது.
- சபாநாயகருக்கு எதிரான பதவி நீக்க தீர்மானம் பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதியில் ஏற்றுக் கொள்ளப் பட்டதிலிருந்து, சபாநாயகர் மக்களவைக்கு தலைமை தாங்குவதைத் தவிர்த்து வருகிறார்.
- இந்த விவாதத்தின் போது சபையின் தலைமை அலுவலராக இருந்தவர் பாஜக எம்.பி. ஜகதாம்பிகா பால் ஆவார்.
- சபையில் வாக்கெடுப்பை ஜகதாம்பிகா பால் கோரிய நிலையில், இது குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானத்தை நிராகரித்தது.
- சபை ஒழுங்கு முறையாக இல்லாததால் வாக்குப் பிரிவினை கோரப்படவில்லை.
- அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் பிரிவு 94(c) இன் படி, மக்களவையின் அனைத்து உறுப்பினர்களின் பெரும்பான்மையினரால் (செயல்படும் பெரும்பான்மை) நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் மட்டுமே சபாநாயகரை நீக்க முடியும் என்பதோடு அப்பதவி வெறும் வருகை தந்து வாக்களிப்பவர்கள் (எளிய பெரும்பான்மை) என்ற முறையின் மூலம் நீக்க முடியாது.
- ஒரு உறுப்பினர் மக்களவையின் பொதுச் செயலாளருக்கு அவரின் நீக்கம் கோரி ஒரு எழுத்துப் பூர்வ அறிவிப்பை சமர்ப்பிக்கும் போது இச்செயல்முறை தொடங்குகிறது.
- சபாநாயகரை நீக்குவதற்கான தீர்மானத்தை முன்மொழிய குறைந்தபட்சம் இரண்டு மக்களவை உறுப்பினர்கள் அறிவிப்பில் கையெழுத்திட வேண்டும்.
- எந்த எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் வேண்டுமானாலும் அறிவிப்பில் கையெழுத்திடலாம், ஆனால் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் கையொப்பம் அதற்குக் கட்டாயமாகும்.
- தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு குறைந்தது 14 நாட்கள் அறிவிப்பு வழங்கப்பட வேண்டும்.
- அது ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், சபையில் விவாதத்திற்குச் செல்ல குறைந்தது 50 உறுப்பினர்களின் ஆதரவு தேவை.
- இந்தச் செயல்முறையை நிர்வகிக்கும் நடைமுறை கட்டமைப்பு மக்களவையில் நடைமுறை மற்றும் நடத்தை விதிகளில், குறிப்பாக விதிகள் 200 முதல் 203 வரையிலான விதிகளில் வகுக்கப்பட்டுள்ளது.
- அத்தீர்மானம் சபாநாயகருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை தெளிவாகக் குறிப்பிட வேண்டும் என்று விதிகள் கட்டளையிடுகின்றன.
- அத்தகைய தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது, சபாநாயகர் சபையின் உறுப்பினராக நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்.
- முதல் கட்டத்திலேயே சபாநாயகர் தீர்மானத்தின் மீது வாக்களிக்க முடியும் என்றாலும், சமநிலை ஏற்பட்டால் அவர் அதன் மீது வாக்களிக்க முடியாது.
- சபாநாயகர் அல்லது துணை சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானம் பரிசீலனையில் இருக்கும்போது, அவர் அவைக்குத் தலைமை தாங்குவதை அரசியலமைப்பின் 96வது பிரிவு தடை செய்கிறது.
- மக்களவையில் தீர்மானம் விவாதிக்கப்பட்டால், சபாநாயகருக்கு அவையில் தன்னைத் தற்காத்துக் கொள்ள அரசியலமைப்பு உரிமை அவருக்கு உண்டு.
- முன்மொழியப்பட்ட தீர்மானத்தின் தன்மை பொதுவாக துணை சபாநாயகரால் ஆராயப் படுகிறது, ஆனால் தற்போதைய மக்களவையில் துணை சபாநாயகர்

இல்லாததால், தலைவர் குழுவின் மூத்த உறுப்பினரால் அது ஆராயப்படலாம்.

- சபாநாயகர் இல்லாத நேரத்தில் சபையை நடத்த தலைவர்கள் குழு உதவுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## IEA மூலம் உலகளாவிய எண்ணெய் இருப்பு வெளியீடு

- மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றத்தின் காரணமாக சர்வதேச எரிசக்தி முகமை (IEA) 400 மில்லியன் பீப்பாய்கள் அவசரகால எண்ணெயை வெளியிடும்.
- உறுப்பு நாடுகளின் மூலோபாய இருப்புக்களில் இருந்து மேற்கொள்ளப்படும் இந்த வெளியீடு, IEA வரலாற்றிலேயே மிகப்பெரியதாகும்.
- IEA உறுப்பு நாடுகள் 1.2 பில்லியன் பீப்பாய்கள் பொது அவசரகால எண்ணெயையும், அரசாங்க விதிகளின் கீழ் சுமார் 600 மில்லியன் பீப்பாய்கள் தொழில்துறை இருப்புக்களையும் கொண்டுள்ளன.
- அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து, ஈரான் பாரசீக வளைகுடாவில் வர்த்தகக் கப்பல்கள் மீது நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- ஜெர்மனி, ஜப்பான் மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகள் தங்களது இருப்பின் ஒரு பகுதியை வெளியிடும்.
- பிராந்தியப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் உலகளாவிய எண்ணெய் விநியோகத்தை நிலைப்படுத்துவதை இந்த வெளியீடு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையான ஹார்மஸ் நீர்ச்சந்தி பாதிக்கப் பட்டு உள்ளதால், எண்ணெய் போக்குவரத்து தடைபட்டுள்ளது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உயரமான பகுதிகளில் பதிவான கடமான்


- இமாச்சலப் பிரதேசத்தின் சம்பா மாவட்டத்தில் உள்ள உயரமான பாதுகாக்கப்பட்ட

பகுதிகளில் கடமான் (Rusa unicolour) முதல்முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.


❖ இந்த இனம் கலாடாப்-கஜ்ஜியார் வனவிலங்கு சரணாலயம் மற்றும் கம்குல் வனவிலங்கு சரணாலயம் ஆகியவற்றில் 2,500–3,000 மீட்டர் உயரத்தில் கண்டறியப்பட்டது.

❖ கடமான் தெற்காசியாவின் மிகப்பெரிய மான் இனமாகும் என்பதோடு இது IUCN செந்நிறப் பட்டியலில் 'எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்' என வகைப்படுத்தப்பட்டு உள்ளது.

❖ இந்த இனம் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் அட்டவணை IIIன் கீழ் பாதுகாக்கப் படுகிறது.




## சிங்கவால் குரங்கு சரணாலய வழக்கு





❖ சாராவதி பள்ளத்தாக்கு சிங்கவால் குரங்கு சரணாலயம் மற்றும் அதன் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் அனைத்து தரைநிலை நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- சரணாலயத்திற்குள் 2,000 மெகாவாட் சாராவதி நீரேற்ற சேமிப்புத் திட்டம் மற்றும் கல்கட்டே பாலத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை எதிர்த்துத் தொடரப்பட்ட பொதுநல மனுவின் (PIL) விசாரணையின் போது இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- இந்தச் சரணாலயம் மேற்குத் தொடர்ச்சி மலைக்கே உரித்தான, அழியும் நிலையில் உள்ள சிங்கவால் குரங்கின் பெயரால் அழைக்கப்படுகிறது.
- வனவிலங்குச் சரணாலயங்களுக்குள்ளான நடவடிக்கைகள் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம், 1972ன் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்றன; இது வனவிலங்கு வாழ்விடங்களை அழிப்பதையோ அல்லது திசை திருப்புவதையோ தடுக்கிறது என்று நீதிமன்றம் கூறியது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகள் யுனெஸ்கோ உலக பாரம்பரியத் தளமாகவும், உலகளாவியப் பல்லுயிர் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகவும் அங்கீகரிக்கப் பட்டு உள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நிதி ஆரோக்கியக் குறியீடு (FHI) 2026





- இந்திய மாநிலங்களின் நிதி நிலையை மதிப்பிடுவதற்காக நிதி ஆயோக் 'நிதி ஆரோக்கியக் குறியீடு (FHI) 2026' என்ற குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் அரசுக் கடனில் மாநிலங்கள் சுமார் மூன்றில் ஒரு பங்கைக் கொண்டு உள்ள நிலையில் முக்கிய பொதுச் சேவைகளையும் வழங்குகின்றன எனவே அவற்றின் நிதியை முறையாக மதிப்பீடு செய்வது அவசியமாகிறது.
- ஒடிசா, கோவா மற்றும் ஜார்கண்ட் ஆகியன 'சாதனையாளர்' (Achiever) பிரிவில் முதலிடம் பிடித்துள்ள மாநிலங்களாகும் என்ற நிலையில் இவை அதிக சொந்த வரி வருவாய், பெரிய மூலதனச் செலவு (மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4–5%) மற்றும் குறைந்த நிதிப் பற்றாக்குறை (GSDP-இல் 3% க்கும் குறைவு) ஆகியவற்றைக் கொண்டுள்ளன.
- பஞ்சாப், மேற்கு வங்காளம் மற்றும் கேரளா ஆகியன கடைசி நிலையில் உள்ள மாநிலங்களாகும் என்ற நிலையில் அதிக வளர்ச்சி சாரா செலவுகள் மற்றும் பலவீனமான நிதி முறைகள் இதற்கு காரணங்களாகக் கூறப்படுகின்றன.
- வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களில் அருணாச்சலப் பிரதேசம் மற்றும்

உத்தரகண்ட் முதலிடத்தைப் பிடித்துள்ளன என்பதோடு பலவீனமான வருவாய் மற்றும் தொடர்ச்சியான நிதி நெருக்கடி காரணமாக இமாச்சலப் பிரதேசம் மற்றும் மணிப்பூர் ஆகியவை பின்தங்கியுள்ளன.

- இக்குறியீடு செலவினத் தரம், வருவாய் திரட்டல், நிதி விவேகம், கடன் குறியீடு மற்றும் கடன் நிலைத்தன்மை ஆகிய ஐந்து முக்கிய தூண்களின் அடிப்படையில் மாநிலங்களை மதிப்பிடுகிறது, இதற்காக இந்தியக் கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரிடமிருந்து (CAG) தரவுகள் பெறப் படுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## பெண்களுக்கான ரொக்க உதவித் திட்டங்கள் 2026




- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அசாம் மற்றும் மணிப்பூர் அரசுகள் பெண்களுக்கு ரொக்க உதவியை அறிவித்துள்ள அதே நேரத்தில் பஞ்சாப் தகுதியுள்ள பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகையை வழங்கியுள்ளது.
- அசாம் மாநிலம் அருணோடோய் திட்டத்தின் கீழ் சுமார் 40 லட்சம் பயனாளிக் குடும்பங்களுக்குத் தலா ₹9,000 2026 ஆம் ஆண்டு மார்ச் 10, அன்று நேரடிப் பணப் பரிமாற்றம் (DBT) மூலம் வழங்கப்படும் என்று அறிவித்தார் என்பதோடு இந்தத் தொகையில் பிஹு ஊக்கத் தொகை மற்றும் நான்கு மாதத் தவணைகள் (ஜனவரி-ஏப்ரல்) அடங்கும், இதன் மொத்த மதிப்பீடு ₹3,600 கோடி ஆகும்.
- மணிப்பூர் இன மோதல்களால் பாதிக்கப்பட்ட சுமார் 3.5 லட்சம் பெண்களுக்கு உதவ மணிப்பூர் அரசு ₹350 கோடி ஒதுக்கியுள்ளது.

- பஞ்சாப் ஆம் ஆத்மி அரசு, அடுத்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தனது கடைசி பட்ஜெட்டில் தகுதியுள்ள பெண்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அறிவித்தது.

### சமயச் சுதந்திர மசோதா 2026

- சட்டவிரோத மத மாற்றங்களைத் தடுக்க சத்தீஸ்கர் அரசு 'சமயச் சுதந்திர மசோதா 2026' என்ற மசோதாக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த மசோதா கட்டாயப்படுத்துதல், மோசடி, தூண்டுதல் (நிதிச் சலுகைகள் உட்பட) அல்லது தேவையற்றச் செல்வாக்கு மூலம் செய்யப்படும் மத மாற்றங்களைத் தடை செய்கிறது.
- இது அனைத்து மதங்களுக்கும் பொருந்துவதுடன் மத மாற்றங்கள் தானாக முன்வந்து நடப்பதை உறுதி செய்கிறது என்பதோடு தடையை மீறி செயல்படுபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.
- இந்த மசோதா இந்திய அரசியலமைப்பின் 25-28 ஆகிய சரத்துகளுடன் இணங்கி செல்கிறது.




## இதரச் செய்திகள்

### ஜுராசிக் கால டைனோசர் முட்டைக் கூடு


- போர்ச்சுகலின் டோரஸ் வேத்ராஸில் உள்ள சாண்டா குரூஸ் கடற்கரையில் அறிவியலாளர்கள் 150 மில்லியன் ஆண்டுகள் பழமையான டைனோசர் முட்டை கூட்டைக் கண்டுபிடித்துள்ளனர்.
- மணற்பாறை பாறைகளில் அசல் அமைப்பில் பாதுகாக்கப்பட்ட 10 டைனோசர் முட்டைகள் இதில் உள்ளன.
- இவை சுமார் 163-145 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் நிலவிய மேல் ஜுராசிக் காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- முதல்கட்ட ஆய்வின் படி, இவை மாமிசம் உண்ணும் தெரோபாட் வகை

டைனோசருடையதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.




## புதிய பண்டைய ஊர்வன இனம் கண்டுபிடிப்பு

- அறிவியலாளர்கள் சோன்செலாசுச்சஸ் செட்ரஸ் என்ற புதிய பண்டைய ஊர்வன இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர், இது சுமார் 225-201 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பிந்தைய ட்ரயாசிக் காலத்தில் வாழ்ந்தவை.
- இதன் புதைபடிவங்கள் அமெரிக்காவின் பெட்ரிஃபைட் ஃபாரஸ்ட் தேசிய பூங்காவில் கண்டெடுக்கப்பட்டன.
- இந்த இனம் பண்டைய முதலைகளின் முன்னோடிகளுடன் தொடர்புடைய சுவோசாரிட் குழுவைச் சேர்ந்தது.
- ஆரம்பகால டைனோசர்களுடன் வாழ்ந்த ஊர்வனவற்றின் பரிணாம வளர்ச்சியைப் புரிந்துகொள்ள இது உதவுகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★